சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-8
ந.க.எண்.8066/அ1/2021, நாள். 12.07.2022

பொருள்: சென்னை மாவட்டம் - "The Hindu" Publishing Pvt. Ltd., மூலம் அரசு மற்றும் ஆதிதிராவிடர் நல உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக நாளிதழ் வழங்குதல் - ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களை கலந்துகொள்ள தெரிவித்தல் – சார்ந்து.

------

பார்வையில் காணும் கடிதத்தின்படி, சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் ஆதிதிராவிடர் நல உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் ஆங்கிலம் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் விதமாக 10 மாணவர்களுக்கு 1 நாளிதழ் வீதம் The Hindu in Schools நாளிதழ் திங்கள் கிழமை முதல் வெள்ளி கிழமை வரை அந்தந்த பள்ளிகளுக்கே 13.07.2022 முதல் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இந்நாளிதழ்களை இணைச்செயல்பாடுகளுக்கான பாடவேளைகளில் மாணவர்கள் வாசிப்பதை ஆங்கில பாட ஆசிரியர்கள் உறுதி செய்யுமாறும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் செயல்பாடுகளை பள்ளியில் செயல்படுத்த ஏதுவாக சென்னை-08, எழும்பூர், மாநில மகளிர் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 13.07.2022 அன்று காலை 11.00 மணிக்கு English Language Proficiency Programme(2021-2022) பணிமனையில் கலந்துகொண்ட ஆங்கில பாட ஆசிரியர்களை கலந்துகொள்ள செய்யுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு மற்றும் ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்,
சென்னை மாவட்டம்.
நகல்
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.